மலர்- 27 | இதழ்- 08 | ஆகஸ்ட் -2026
Volume- 27 | Issue - 08 | August - 2026
தமிழ் மாத இதழ் | தனிப்பிரதி ரூ.20/-
Tamil Monthly | Per copy Rs. 20/-

# வளரும் விண்ணரசு

## VALARUM VINNARASU







இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன்
INDIA CHURCH GROWTH MISSION



கிறிஸ்துவுக்குள் பிரியமான வளரும் விண்ணரசு வாசக சகோதர சகோதரிகளுக்கு,

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் நல்வாழ்த்துக்கள்!

“அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.” (ரோமர் 8:28).

மேற்கண்ட வசனத்தின்படி அழைக்கப்பட்டவர்கள், அவரைப் பின்பற்றுகிறவர்கள், அவருடைய ஊழியக்காரர்கள், அவரையே நேசிக்கிறவர்கள் யாவருக்கும் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது. தேவனை பின்பற்றுகிறவர்களை அவர் கைவிடுவதே இல்லை.

நானும், திரு. தம்பிராஜ் அண்ணனும் (Internal Auditor)ஜுலை 2 முதல் 4 வரை கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தரிசனம் பரப்பும் ஊழியர்களைச் சந்தித்து, அவர்களை உற்சாகப் படுத்தினோம். அங்குள்ள ஊழியப் பங்காளர்களுடன் ஊழியத் தேவைகளைப் பகிர்ந்து கொண்டோம்.

ஜுலை 11ஆம் தேதி பல்கலைநகர் ஆலயத்தில் சுயசார்புத் திருச்சபை அருட்பணியாளர்களுக்கென்று வருடாந்திரக் கூடுகை நடைபெற்றது. திருச்சபை வளர்ச்சிக்கான தீர்மானங்கள் செய்யப்பட்டது. அன்று மாலையில் ஜோதிமாணிக்கம் திருச்சபையில் 8 பேர் திருமுழுக்குப் பெற்றனர்.

ஜுலை 12ஆம் தேதி செல்லம்பட்டி மற்றும் ஜோதிமாணிக்கம் ஆகிய திருச்சபைகளின் ஆராதனையில் கலந்து கொண்டு தேவசெய்தியளித்தேன்.

ஜுலை 13ஆம் தேதி உப்பிலியாபுரம் ஆலயத்திலுள்ள அருட்பணியாளரின் வீடு பிரதிஷ்டை செய்யப்பட்டது. தற்போது திரு.பிரவீன்குமார் அவர்கள் பணித்தள அருட்பணியாளராக பொறுப்பேற்றுள்ளார்.

ஜுலை 14-16 வரை, மதுரை-T.வாடிப்பட்டியிலுள்ள இறைவாக்கு இல்லத்தில் தரிசனம் பரப்பும் ஊழியர்களுக்கான பயிற்சிக்



பல்கலைநகரில் நடைபெற்ற சுயசார்புத் திருச்சபை ஊழியர்களின் கூட்டம்




திருமுழுக்குப் பெற்றவர்களுடன்...



உப்பிலியபுரம் அருட்பணியாளர் வீடு பிரதிஷ்டை செய்யப்பட்டது.



சத்தீஷ்கரில் நடைபெற்ற வாலிபர் கூட்டத்தில் பங்கேற்றவர்கள்.



தொடர்ச்சி கடைசிப்பக்கம் பார்க்க...

நிறுவனர்
டாக்டர். N.J. ஞானையா

**ஆசிரியர் குழு:**
அருள்திரு.G. பொன்னுராஜ்
அருள்திரு. இம்மானுவேல் பாண்டி
திரு. இரா. பாலசுப்பிரமணியன்
திருமதி. ரேணுகா பிரின்ஸ்
திருமதி. செல்வ டேனி சாலமோன்
திருமதி. ஜெனிபர் ரவிக்குமார்

ஆண்டுச் சந்தா: ₹ 200/-   ஆயுள் சந்தா: ₹ 1500/-

வளரும் விண்ணரசு

நமது இந்தியாவில் உள்ள எல்லா மக்கள் கூட்டத்தினரையும், இயேசுவின் சீடர்களாக்க பாரம் கொண்ட, இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷனின் **(ICGM)** துதி–ஜெபக் குறிப்புகளையும், ஆண்டவர் இயேசுவின் பிள்ளைகளாகவும், அவரது சீடர்களாகவும் விரும்புபவர்கள் அவரை அறியும் அறிவில் வளரத் தேவையான படைப்புகளையும் மாதந்தோறும் உங்களுக்குக் கொண்டு வருகிறது.

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| அருட்செய்தி! | 04 |
| துதித்து மன்றாடுவோம்! | 07 |
| ஜுலை மாத வேத விடைகள் | 14 |
| சரியான விடை எழுதியவர்கள் | 20 |
| வேத வினாக்கள் | 21 |
| நடப்புச் செய்திகள் | 22 |


**ICGM**
**58/1 முத்தாலம்மன் கோயில் தெரு, சேலையூர், சென்னை- 600 073.**
அலைபேசி : 94459 24440
ICGM Land Line: (044)2229 1045
contacticgm@gmail.com

வளரும் விண்ணரசு இதழுக்கு சந்தா அனுப்புபவர்கள் கீழ்க்கண்ட வங்கிக்கணக்குக்கு அனுப்பி 94459 24440 என்ற எண்ணிற்கு அனுப்பிய விபரங்களை தெரிவியுங்கள்.

A/C NAME: IRAI ARASU TRUST, BANK NAME: STATE BANK OF INDIA
A/C NUMBER: 10143136762, IFSC CODE: SBIN0002235

# இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன் ICGM

**தரிசனம்: (Vision Statement)**

நமது இந்திய நாட்டின் அனைத்து மாநிலங்களில் வாழும் ஒவ்வொரு மக்கள் கூட்டத்திலும் சாட்சியுள்ள சுயசார்புள்ள திருச்சபைகள்.

**வேத ஆதாரம்:** (வெளி.7:9)

“இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன்.”

**செயல்திட்டம்: (Mission Statement)**

இயேசு கிறிஸ்துவின் சீடர்களாகிய நாம், இந்தியாவில் நற்செய்தி சென்றடையாத, தேவன் வழிநடத்துகிற மக்கள் கூட்டங்களுக்கு, நற்செய்தியைப் பிரசங்கித்து, அவர்களை சீடர்களாக்கி, சாட்சியுள்ள சுயசார்புள்ள திருச்சபைகளை உருவாக்குகின்ற நோக்கத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

**வேத ஆதாரம்:** (மத்தேயு 28:19-20)

ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.



# அருட்பணி: இரக்கத்தின் செயல் வடிவம்

அருட்செய்தி
மத்தேயு 9: 35–38

Rev.G. பொன்னுராஜ்

கலிலேயாவில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து செய்த அருட்பணியை, இந்தப் பகுதி சுருக்கமாக கூறுவதோடு, சீடர்களை அருட்பணிக்கு அனுப்பும் நிகழ்வுக்கு முன்னுரையாகவும் இப்பகுதி அமைகிறது.

150 கோடி மக்கள் தொகை கொண்ட நமது நாட்டில், அருட்பணி நடைபெறும் பகுதிகள் மிகச் சொற்பமே. நம்பிக்கையின்றி, வழிகாட்டுதலின்றி வாழும் மக்களைக் கண்டு, இயேசு கிறிஸ்து இரக்கம் கொண்டார். அதேவிதமான கரிசனை நம்மிலும் இருக்க வேண்டுமென்று இயேசு கிறிஸ்து எதிர்பார்க்கிறார். அதைக் குறித்து இங்கு காண்போம்.

1. **இயேசுவின் முழுமையான அருட்பணி** (வ.35)

இயேசு கிறிஸ்து போதித்தார், நற்செய்தியை அறிவித்தார், நோய்களை சுகமாக்கினார். இயேசு கிறிஸ்துவின் அருட்பணியை மூன்றுவிதங்களில் காணலாம்.

போதித்தார்-கடவுளுடைய சத்தியத்தை போதித்தார். அறிவித்தார்– இரட்சிப்பின் நற்செய்தியை அறிவித்தார். சுகமாக்கினார்– மக்களின் தேவைகளை சந்தித்தார்.

உண்மையான அருட்பணி என்பது, வார்த்தையாலும், செயலாலும் நடைபெற வேண்டும். கிரியைகளில்லாத விசுவாசம் செத்தது என்று யாக்கோபு கூறுகிறார். (யாக்.2:20).

இந்தியாவிற்கு அருட்பணியாற்ற வந்த இயேசு கிறிஸ்துவின் தொண்டர்கள், இந்தியர்களின், குறிப்பாக தமிழ்நாட்டின் பொருளாதார ஏற்ற இறக்கங்களைக் கண்டனர். உணவுக்கே வழியில்லாத மக்களுக்கு, ஜீவ அப்பத்தைக் குறித்து சொன்னால், எப்படி விளங்கும் என்றறிந்த அவர்கள், முதலாவது, உணவு கிடைக்க ஏற்பாடு செய்து, ஜீவ அப்பமாகிய இயேசு கிறிஸ்துவை அறிவித்தார்கள்.

2. **இயேசுவின் இரக்கமுள்ள இதயம்** (வ.36)

மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போல மக்கள் இருக்கிறார்கள் என்றறிந்து, அவர்கள் மீது கரிசனை கொண்டார்.

சோர்வடைந்த மக்கள், வழி தவறியவர்கள், வழிகாட்டுதல் இல்லாதவர்கள் ஆகியவர்களைப் பார்த்து, இயேசு கிறிஸ்துவின் இதயம் கரிசனை கொண்டது.

நம்முடைய குடும்பங்களில், நமது ஊரில், நமது திருச்சபையில், நமது சமுதாயத்தில் உள்ள இப்படிப்பட்டவர்களைப் பார்க்கும்போது, நமது இதயத்தில் இரக்கம்–கரிசனை வருகிறதா?

தமிழ் மொழியில் வேதாகமத்தை முதன்முதலில் மொழி பெயர்த்த பற்தொலோமேயு சீகன்பால்க் அவர்கள் கூறியது, “தமிழர்களிடம் ஆன்மீகத் தத்துவங்கள் நிரம்பி வழிகின்றன. ஆனால், அவர்களிடம் இல்லாதது இயேசு கிறிஸ்து மட்டுமே. அவரை மக்களிடம் கொண்டு செல்வதற்கு நாம் முயல வேண்டும்” என்றார்.

அதனால்தான், நம்மைத் தேடி வந்த வெளிநாட்டு அருட்பணியாளர்கள், மக்களின் அறியாமையை போக்குவதற்கு கல்வி மிகவும் இன்றியமையாதது என்பதால், கல்விக்கூடங்களை திறந்து, மக்களின் அறியாமை இருளை முதலாவது அகற்றி, உண்மையான ஒளியாகிய இயேசு கிறிஸ்துவை உதிக்க வைத்தார்கள்.

3. **அறுவடை அதிகம்; வேலையாட்களோ கொஞ்சம்** (வ.37)

நமது நாட்டில் ஆத்தும அறுவடை செய்வதற்கேற்றவிதமாக, வயல்நிலங்கள் தயாராக இருக்கிறது. இரட்சிப்புக்கு ஆயத்தமாக மக்கள் இருக்கிறார்கள். ஆனால், தேவனைத் தேடும் கரிசனை நிறைந்த இதயம் உள்ள மக்கள் இல்லாததால், அறுவடை செய்கிறவர்கள் குறைவாக இருக்கிறார்கள். அறுவடை செய்ய வேண்டிய பகுதி அதிகமாக உள்ளது. இந்த தேவையை-கரிசனையை உணரும் உள்ளத்தை இன்று தேவன் தேடுகிறார்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள், அவருக்காக அருட்பணி செய்பவர்கள் முன்மாதிரியான வாழ்க்கை வாழ வேண்டியது அவசியமான ஒன்று. ஏனென்றால், அநேகரை வெளிச்சத்திற்குள் வரவழைக்க, நாம் முதலாவது வெளிச்சமாக இருக்க வேண்டியது மிக அவசியம். (மத்.5:14).

அறுவடைக்கு ஆண்டவர் அறுவடையாளர்களைத் தேடுகிறார். அவர் தேடும் அறுவடையாளர் நீங்கள்தானே!

4. **அறுவடையின் ஆண்டவரிடம் மன்றாடுங்கள்** (வ.38)

இயேசு கிறிஸ்து முதலில் சொன்னது, அருட்பணிக்கு செல்லுங்கள் அல்லது மன்றாடுங்கள்.

**அருட்பணியாளர்களை எழுப்புவது கடவுள்.**
**அறுவடையின் ஆண்டவர் கடவுள்.**
**மன்றாட்டு அருட்பணியின் அடித்தளம்.**

நாம் மன்றாடும்போது, கடவுள் மற்றவர்களை அனுப்புவதோடு, நம்மையும் அதற்கென்று ஆயத்தப்படுத்தி, அனுப்புகிறார்.

இன்றைய உலகம், நவீன தொழில்நுட்பத்தால், எல்லாவற்றையும், இருந்த இடத்திலிருந்து அறிந்து கொள்ள, வழிவகை செய்கிறது. தொலைக்காட்சிகள், சமூக வலைதளங்கள் போன்றவற்றை, இந்த உலகம் தன்னுடைய மேன்மையை பறைசாற்ற பயன்படுத்திக் கொண்டிருக்கிறது.

ஆனால், காலத்திற்கேற்றவாறு, நாம் செய்யும் அருட்பணியின் உத்திகளை மாற்றியிருக்கிறோமா என்று எண்ணி பார்த்தால், நாம் பல வருடங்கள் பின்னோக்கியிருக்கிறோம்.

இயேசு கிறிஸ்துவின் ஆத்தும தாகமறிந்த, அருட்பணியாளர்களை ஆண்டவர் தேடுகிறார். இன்றே இரட்சணியநாள்-இன்றே அனுக்கிரக காலம் என்பதை அறிந்தவர்கள் யார்?

ശശശ

## அறிவிப்பு



திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் சேலம் மாவட்டங்களில் உள்ள தாங்குவோரின் கவனத்திற்கு.

திருச்சி மாவட்டம், உப்பிலியபுரம் **ICGM** திருச்சபையில் பணிபுரிந்த திரு.**S.** ஜெயக்குமார் அவர்கள், நிர்வாகக் காரணங் களுக்காக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, **06/02/2026** முதல் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்பதை தெரிவித்துக் கொள் கிறோம்

ஆகவே, இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன் ஆதரவாளர்கள், காணிக்கை மற்றும் ஊழியம் சம்பந்தமாக அவரைத் தொடர்பு கொள்ள வேண்டாமென கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

மேற்கண்ட மாவட்டங்களில் காணிக்கை சேகரிக்க திரு. **J.P.** ரவிக்குமார் **(9750443284)** அவர்கள் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளார் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். நன்றி.

**ICGM**– நிர்வாகக்குழுவினர்.

# ICGM

## வங்கி கணக்கு விபரங்கள்

| | | |
|---|---|---|
| ACCOUNT NAME | : | INDIA CHURCH GROWTH MISSION |
| ACCOUNT NUMBER | : | 10143136773 |
| BANK | : | STATE BANK OF INDIA |
| BRANCH NAME | : | SELAIYUR, CHENNAI- 73 |
| IFSC CODE | : | SBIN0007948 |

icgm1014@sbi

அருட்பணியாளர் உதவி மற்றும் பொதுவான காணிக்கை

| | | |
|---|---|---|
| ACCOUNT NAME | : | INDIA CHURCH GROWTH MISSION |
| ACCOUNT NUMBER | : | 11194454531 |
| BANK | : | STATE BANK OF INDIA |
| BRANCH NAME | : | VINAYAGA NAGAR, MADURAI. |
| IFSC CODE | : | SBIN0001479 |

ஆலய கட்டிட நிதிக்காக

| | | |
|---|---|---|
| ACCOUNT NAME | : | INDIA CHURCH GROWTH MISSION |
| ACCOUNT NUMBER | : | 926010015545855 |
| AXIS | : | AXIS |
| BRANCH NAME | : | SELAIYUR, CHENNAI-73 |
| IFSC CODE | : | UTIB0001181 |

மருத்துவ நிதிக்காக

| | | |
|---|---|---|
| ACCOUNT NAME | : | IRAI ARASU TRUST |
| ACCOUNT NUMBER | : | 10143136762 |
| BANK | : | STATE BANK OF INDIA |
| BRANCH NAME | : | MK UNIVERSITY - MADURAI-21 |
| IFSC CODE | : | SBIN0002235 |

பத்திரிக்கை ஊழியத்திற்காக

icgm1014@sbi

SCAN & PAY

OR

BANK

வங்கி கணக்குகள் மூலமாக

மேலேயுள்ள QR கோடை பயன்படுத்தியோ அல்லது வங்கி கணக்குகள் மூலமாகவோ, உங்கள் காணிக்கைகளை அனுப்பி, அதன் விபரங்களை SMS/whatsapp மூலமாக **94459 24440** என்ற எண்ணுக்கு அனுப்புங்கள்.

உங்களுக்கு ரசீது அனுப்ப உதவியாயிருக்கும். | *நன்றி.*

# தமிழ்நாடு

துதித்து மன்றாடுவோம்

**ஆகஸ்ட்-1**

### கள்ளக்குறிச்சி மாவட்டம்

**அருட்பணியாளர்: திரு. காவியகாந்த்**
**திருமதி.செல்வி**

பூமதி, ராஜேஸ்வரி ஆகியோருக்குக் கிடைத்த ஆண் குழந்தைக்காக, கோவிந்தராஜ் விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, பூமதியின் குழந்தை மஞ்சள் காமாலையிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். ஜெயா, பெருமாள் கடன் பிரச்சினையிலிருந்து விடுதலை பெற, புண்ணியமூர்த்தி குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, தமிழ்ச்செல்வி, கனகராஜ், கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் இரட்சிக்கப்பட, கிணற்றுக்குள் தவறி விழுந்து கால் முறிவு ஏற்பட்ட வெங்கட்ராமன் நிறைவான சுகம் பெற ஜெபிப்போம்.

### கடலூர் மாவட்டம்

**அருட்பணியாளர் : திரு.M. லிங்கம்**
**திருமதி. கலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அருகேரி, வடகரை, தொளார், எறப்பாவூர், மருவத்தூர், பொன்னேரி, பெண்ணாடம் ஆகிய கிராமங்களுக்காக, தேவநேசம்–உமா தம்பதிக்கு பல வருடங்கள் கழித்து கிடைத்த குழந்தை பாக்கியத்திற்காக, ஊழியரின் மகன் நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்றதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்ட பவுனம்மாள், ஈஸ்வரி, ராமசாமி, விஜயா, எழிலரசன் ஆகியோர் இரட்சிக்கப்பட, சீலா–சாமுவேல் தம்பதிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, ஆலயத்தின் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு.V. சிவராமன்**
**திருமதி. பெரியநாயகி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சுமைதாங்கி, செம்பேரி, இருளம்பட்டு, சின்ன கொசபள்ளம், கீரனூர் ஆகிய கிராமங்களுக்காக, பூபதி, காவியா ஆகியோருக்கு தேவன் தந்த சுகத்திற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட பூபதி, காவியா, செல்வமணி குடும்பம், பாரதி ஆகியோர் இரட்சிக்கப்பட, கணவரை இழந்த செல்வமணிக்கு தேவன் ஆறுதல் தர, பாரதி கண் வலியிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

### ஈரோடு மாவட்டம்

**ஆகஸ்ட் -2**

**அருட்பணியாளர்:**
**திரு.G.தனம் யோகராஜ் – திருமதி.டான்சி**

வெங்கடேஷ், முருகன், பூங்கொடி, சுப்பிரமணியன், அமுதவள்ளி ஆகியோர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதற்காக, முத்துச்சாமி, சூரியகுமார் நற்செய்தியை ஆர்வமாகக் கேட்டதற்காகத் துதிப்போம். ரெட்டிபாளையத்தில் ஜெபக்குழு ஆரம்பிக்க இடம் கிடைக்க, கமலேஷ், முருகேசன், முத்துசாமி ஆகியோர் குடும்பம் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**திரு. அதிசய அமலன்**
**திருமதி. ஆனந்தி விமலா**

காளியம்மாளுக்கு இடுப்பு அறுவை சிகிச்சை நல்லமுறையில் நடைபெற்றதற்காக–சுகம் பெற்று வருவதற்காக, ஹரிணி, பூர்விகா, ஹரிஹரன் ஆகியோர் நற்செய்தியை ஆர்வமாகக் கேட்டதற்காக, மணியன் மனநோயிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். சீடத்துவ பயிற்சிகள், வாலிபர் கூடுகை, ஜெபக்குழு, சிறுவர் ஊழியம் ஆகியவை தடையின்றி நடைபெற,

கேசவமூர்த்தி குடும்பம், முருகானந்தம் குடும்பம், தனலட்சுமி குடும்பம் விசுவாசத்தில் நிலைத்திருக்க, பிரியாவின் கணவர் சுரேஷ், அவரது இரண்டு மகன்களும் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

## கோயம்புத்தூர் மாவட்டம்

### சுயசார்புத் திருச்சபை

**அருட்பணியாளர் :**

**திரு. லூர்டஸ்- திருமதி. கிளாடிஸ்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பூவளபருத்தி, கரட்டுப்பாளையம், குள்ளேகவுண்டனூர், பொன்னாச்சியூர், உப்பிலியனூர், பில்சின்னம்பாளையம், சமத்தூர் ஆகிய கிராமங்களுக்காக, பாபு, சரத், ஜானகிராம், காவியா, ஸ்ரீதரன், சாமுண்டி, பிரபு ஆகியோர் நற்செய்தியை ஏற்றுக்கொண்டதற்காகத் துதிப்போம். திருமூர்த்தி மனந்திரும்ப, பில்சின்னம்பாளையம் பகுதி மக்கள் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற. சபை விசுவாசிகள் கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற, ஜான்சி பிரகாசுக்கு சுகப்பிரசவம் கிடைக்க ஜெபிப்போம்.

**ஆகஸ்ட்-3**

**அருட்பணியாளர்:**

**திரு.எபிநேசர் உவைட்-திருமதி. மேரி**

எபிநேசரின் பேரனுக்கு கிடைத்த சுகத்திற்காக, புதிதாக நற்செய்திக்கு ஆர்வம் காட்டும் ஜெயம்மாளுக்காகத் துதிப்போம். ஊழியர் (முதுகு வலி), ஆபிரகாம், சித்ரா, கிருபை ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, பிரேம், அற்புதமேரி, ஜெயசீலி, கனகமணி ஆகியோரது குடும்பங்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

### சுயசார்புத் திருச்சபை

**அருட்பணியாளர் :**

**திரு. இம்மானுவேல் கிளமெண்ட் கிப்ட்சன்**
**திருமதி. செல்லாண்டீஸ்வரி**

கேரள எல்லைப் பகுதியில் புதிதாக ஊழியம் ஆரம்பிக்கப்பட்டதற்காகத் துதிப்போம். ஜான், தினேஷ் ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற-இரட்சிக்கப்பட, நந்தகுமார் திருமணம் விரைவில் நடைபெற, தங்கவேலு மனந்திரும்ப, இம்மானுவேல் சந்திரசேகர் நரம்பு அழுத்த நோயிலிருந்து நிறைவான சுகம் பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு.R. ஸ்டீபன் செல்வகுமார்**
**திருமதி. கரோலின்**

சிவா, அபிநயா, அபர்ணா, ராமகிருஷ்ணன், கௌசல்யா, தங்கராஜ், கவின் ஆகியோருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, ஆர்த்திக்கு எட்டு வருடங்களுக்குப் பிறகு கிடைத்த கர்ப்பத்தின் கனிக்காக, ராஜ்குமாருக்கு தேவன் கொடுத்த நல்ல வேலைக்காக, தனபால், பிரசாந்த், நடராஜ் ஆகியோர் திருமுழுக்கு எடுக்க ஆயத்தமாக இருப்பதற்காகத் துதிப்போம். கிட்டம்மாள், ராஜு (புற்று நோய்) ஆகியோர் நிறைவான சுகம் பெற, முத்தம்மாள் வீடு கட்டுமானப் பணித் தேவைகள் சந்திக்கப்பட, ஆலயம் கட்ட இடம் வாங்கப்பட ஜெபிப்போம்.

## திருப்பூர் மாவட்டம்

**ஆகஸ்ட்-4**

**அருட்பணியாளர்:**

**திரு.S. பால்ராஜ் -திருமதி. மரியாள்**

தமிழ்ச்செல்வி, அற்புதா, மோசஸ், வளர்மதி, சரஸ்வதி ஆகியோர் மனந்திரும்ப, டைட்டஸ், பால்ராஜ், மோசஸ் ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, ஆலய கட்டுமானப் பணிகள் தொடங்கப்படவும், அதன் தேவைகள் சந்திக்கப்படவும், ஆர்த்திக்கு நல்ல வேலை கிடைக்கவும் ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு.G. பால்துரை**
**திருமதி. ஜெபரூபி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கிளாங்குண்டல், வடுகப்பட்டி, அறிவொளி நகர், புதுக்கோட்டை ஆகிய கிராமங்களுக்காக, ராமலிங்கம் விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, நாச்சிமுத்துவுக்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். அருக்காள், செல்வி, கோமதி, ராஜேந்திரன், பேபி, முருகாத்தாள், ராமச்சந்திரன், அன்பழகன், மனோஜ், மைனா,

முருகேசன், மகிமா ஆகியோர் ஆராதனையில் கலந்து கொள்ள ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் :**

**அருள்திரு. சாலமோன்ராஜ்**
**திருமதி. ஜெயக்கொடி**

ஆலயத்தின் சுற்றுச்சுவர் கட்டுமானப்பணி ஆரம்பிக்கப்பட்டதற்காக, கலா, சித்ரா, வெண்ணிலா, ஆறுச்சாமி ஆகியோர் புதிதாக ஆராதனையில் கலந்து கொண்டதற்காக, மகாலட்சுமி, மாணிக்கம், அசோகன் ஆகியோர் விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, பார்த்திபன்-கோதாவரி ஆகியோரது திருமணம் நடைபெற்றதற்காகவும், பாக்கியலட்சுமி மனநோயிலிருந்து சுகம் பெற்று, கணவரோடு சேர்ந்து வாழ்வதற்காகவும் துதிப்போம். மனைவியை இழந்த லூக்காவிற்கு தேவன் ஆறுதல் தரவும், விபத்தால் பாதிக்கப்பட்ட ஹெப்சிபா (கால் எலும்பு முறிவு) சுகம் பெற, ஊழியரின் மனைவி ஜெயக்கொடியின் தாயார் இருதய நோயிலிருந்து சுகம் பெறவும், கோபால் நரம்பு நோயிலிருந்து சுகம் பெறவும், கோபால், வடிவேல் ஆகியோரது குடும்பங்கள் மீண்டும் இணைந்து வாழவும், கண் அறுவை சிகிச்சை செய்யப்பட்ட லட்சுமி, தெய்வத்தாய் ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்கவும் ஜெபிப்போம்.

**ஆகஸ்ட்-5**

**திருச்சி மாவட்டம்**

**அருட்பணியாளர் :**

**திரு. பிரவீன்குமார்-திருமதி. மீனா**

ஜெஸி புஷ்பம் நிறைவான சுகம் பெறவும், யாபேஸ் விசுவாசத்தில் வளரவும், ஊழியரது வீடு கட்டுமான பணிகள் நிறைவடையவும் ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு.B. தினேஷ் – திருமதி. எமீமா பியூலா**

கோபி (இருதய நோயிலிருந்து), லட்சுமி அம்மா (இரத்த அழுத்தம்-சர்க்கரை நோய்) ஆகியோர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். பிரபாகரனுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க, குமார் இருதய நோயிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**மதுரை மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு. வின்சென்ட்**
**திருமதி. பவுலின் கிரேஸ்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சின்ன வாகைக்குளம், வாகைக்குளம், தாழையூத்துப்பட்டி, முண்டுவேலம்பட்டி, ஒத்தவீடு, கீழக்குயில்குடி ஆகிய கிராமங்களுக்காக, சாம்-ரஞ்சனி தம்பதிக்கு ஆண் குழந்தை கிடைத்ததற்காக, ஊழியர்-அவருடைய மகன் ஆகியோர் விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட நடராஜ், கணேசன், ஆண்டிஸ் மகன், துரைராஜ், தங்கராஜ், ராஜாமுத்து ஆகியோருடைய குடும்பங்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**ஆகஸ்ட் -6**

**அருட்பணியாளர் :**

**திரு.S. சாமுவேல்-திருமதி. ரோகிணி**

புதிதாக நற்செய்தி கேட்ட கலைச்செல்வி, கண்ணன், மிருதுளா, ஜெயக்கிருபை, ஆரோன் ஆகியோருக்காக, ரோஹித்துக்கு கிடைத்த சுகத்திற்காக, ரெபேக்காள் புற்றுநோயிலிருந்து சுகம் பெற்று வருவதற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட கலைச்செல்வி, கண்ணன், மிருதுளா, ஜெயக்கிருபை, ஆரோன் ஆகியோர் இரட்சிக்கப்பட, வாகன விபத்தில் கால் முறிவு ஏற்பட்ட பார்த்திபனுக்கு நிறைவான சுகம் கிடைக்க, அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட வனிதா நிறைவான சுகம் பெற, நேசனுக்கு வேலை கிடைக்க, மினி பிரியா குடும்பம் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு. கந்தசாமி-திருமதி. முருகம்மாள்**

நற்செய்தி கேட்ட நீலமேகம், ராஜாமணி ஆகியோருக்காக, ஜேம்ஸ், மணிமேகலை, மீனா ஆகியோருக்கு சுகம் கிடைத்ததற்காக, குமார் ஆராதனையில் கலந்து கொள்வதற்காகத் துதிப்போம். ஜேம்ஸ் கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற, மதன் குமாரின் கல்லூரி

கட்டணத்திற்கானத் தேவைகள் சந்திக்கப்பட, மணிமேகலை, கருப்பு ஆகியோர் இரட்சிக்கப்பட, ராக்கு சுகம் பெற, வெண்ணிலாவின் குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, அருண் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**திரு.M. கார்த்தி-திருமதி. ரீஜா**

நதியாவிற்கு கிடைத்த சுகத்திற்காக, பெத்தம்மாளுக்கு அறுவை சிகிச்சை நடைபெற்றதற்காகத் துதிப்போம். சின்ன கண்ணம்மா, வின்சென்ட் ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**ஆகஸ்ட்-7**

**அருட்பணியாளர் :**
**திரு.A. கந்தசாமி-திருமதி. முருகம்மாள்**

ஜோஸ் விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, ஆஸ்நாத் கை எலும்பு முறிவிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். முனுசாமி பக்கவாத நோயிலிருந்து நிறைவான சுகம் பெற, நர்மதா குடும்பம் இரட்சிக்கப்பட, பிரகாஷ் மனைவிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**திரு.P. சத்தியநாதன்-திருமதி. கிறிஸ்டி**

ஊழியர் மகனுக்கு திருமணம் நடைபெற்றதற்காக, போத்தநதி, புதுப்பட்டி, கோபாலபுரம், குச்சம்பட்டி வையம்பட்டி ஆகிய இடங்களில் மாலைநேர வகுப்பு நடைபெறுவதற்காகத் துதிப்போம். பிரபாகரன், அஜித், மோனிஷா, சுவாதி, பானு, சத்தியா, யோகேஷ், ஜான்சி ராணி, பிரதீபா, பிரவீனா ஆகியோர் விசுவாசத்தில் வளர-வேலை கிடைக்க, ஜான்சி ராணி, சுபலட்சுமி ஆகியோர் ஆராதனையில் கலந்து கொள்ள, சங்கர், திருப்பதி ஆகியோர் மனந்திரும்ப ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**திரு.P. ராஜா-திருமதி. அன்னாள்**

நற்செய்தி கேட்ட இந்திராணி, தங்கம், பார்வதி, திருப்பதி, அழகர், கோபால், ஈஸ்வரன் ஆகியோருக்காக, பார்வதிக்கு கிடைத்த சுகத்திற்காக, ராஜா, ஆனந்தி ஆகியோருக்கு கிடைத்த வேலைக்காகத் துதிப்போம். பார்வதி குடும்பம் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**ஆகஸ்ட்-8**

**அருட்பணியாளர் :**
**திரு. காளிமுத்து-திருமதி. குமுதா**

புதிதாக ஆராதனையில் கலந்து கொண்ட பிச்சையம்மாள், பாண்டியம்மாள், ஜெயராணி ஆகியோருக்காக, சிலம்பு செல்வி வீட்டில் நடைபெற்ற ஜெபக்கூட்டத்திற்காகத் துதிப்போம். பால்பாண்டியனுக்கு திருமணம் நடைபெற, சித்தம்மா இரட்சிக்கப்பட, மாரீஸ்வரன் மனநோயிலிருந்து சுகம் பெற-வேலை கிடைக்க, கலைச்செல்வி ஆராதனையில் கலந்து கொள்ள ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் : திரு. ஏனோக்**
**திருமதி.பாலின் சௌந்தர்யா**

தேவி தோல் ஒவ்வாமை நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, குமார், பிரனேஷ் இருசக்கர வாகன விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, வருண் கார்த்தியின் தம்பி சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் :**
**திரு.M. அகஸ்டின்-திருமதி. ஜோஸ்பின்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட செல்லம்பட்டி, மணல்பட்டி, காந்திநகர், சங்கம்பட்டி, சக்கரப்பட்டி ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். ரம்யாவுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க-கணவர் இரட்சிக்கப்பட, லெனின் சிறுநீரக நோயிலிருந்து சுகம் பெற, கலைமணி, வீரம்மாள் ஆகியோர் வீடு கட்டப் பணத் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

**ஆகஸ்ட் -9**

**அருட்பணியாளர் :**
**சகோதரி. எஸ்தர் செல்வராணி**

ஊழியருக்குக் கிடைத்த சுகத்திற்காக, கிளாட்சன், ரோஜா ஆகியோருக்கு வேலை கிடைத்ததற்காகத் துதிப்போம். மொக்கமாயன், கருப்பாயி, ஈஸ்வரன், தாவீது ஆகியோருக்கு

நிறைவான சுகம் கிடைக்க, அன்பு (7 வயது) விரைவாக பேச்சு வர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**அருள்திரு.M. மூவேந்திரன்**
**திருமதி. விஜயா**

சித்ரா, சினேகா, விஜயலட்சுமி ஆகியோர் விசுவாசத்தில் வளர்ந்து வருவதற்காக, நற்செய்தி கேட்ட மாரீஸ்வரி, மனோவா, தமயந்தி ஆகியோருக்காக, பழனியம்மாள் தொடர்ந்து ஆராதனையில் கலந்து கொள்வதற்காக, மேரி விஜயாவுக்கு அறுவை சிகிச்சை நன்றாக நடைபெற்றதற்காக, தேவமகிபனுக்கு பதவி உயர்வு கிடைத்ததற்காகத் துதிப்போம். மோசஸ் மணி மூலநோயிலிருந்து சுகம் பெற, ராஜன், அபர்ணா ஆகியோருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க, ஐஸ்வர்யாவுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, கமலக்கண்ணன், அர்ச்சனா தேவி, கலையரசன், மனோவா, சுருதி, சூர்யா ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**திரு.A. பால்ராஜ்–திருமதி. ஏஞ்சல்**

திருநாவுக்கரசின் வியாபாரம் ஆசீர்வதிக்கப்பட்டதற்காக– குடும்பமாக ஆலயம் வருவதற்காக, புதிதாக நற்செய்தி கேட்ட கணேஷ், லில்லி, துவக்காரன், கிருஷ்ணவேணி, குமார், பழனி ஆகியோருக்காக, மீனா மரண பயத்திலிருந்து விடுதலை பெற்றதற்காக, சந்தியா கணவனோடு இணைந்ததற்காக– ஆராதனையில் கலந்து கொண்டதற்காகத் துதிப்போம். கணவனை இழந்த உஷா குடும்பத்திற்கு சமாதானம் கிடைக்க–பிரிந்து போன மகன் திரும்பி வர, கிருஷ்ணவேணிக்கு (10 ஆண்டுகள்) குழந்தை பாக்கியம் கிடைக்க, பழனி, குமார் ஆகியோர் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**ஆகஸ்ட்-10**

**அருட்பணியாளர் :**
**திரு.G. ஜெகன்–திருமதி. திவ்யா**

சபையை சுற்றிலும் முள்வேலி அமைக்கப்பட, தாயை இழந்த பாண்டி, முனீஸ், தனலட்சுமி ஆகியோருக்கு தேவன் ஆறுதல் தர, ஜெலினுக்கு இரத்தத் தட்டை அணுக்கள் அதிகரிக்க, ஜெயலட்சுமிக்கு தலை வலியிலிருந்து சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**
**அருட்பணியாளர் :**
**திரு. பிலிப் முருகன்–திருமதி. அனிதா**

சாமுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க, ராமசாமி வழக்கிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**
**அருட்பணியாளர் :**
**திரு. வயநாட்டுமுத்து–திருமதி. கனியமுது**

கனியமுதுவுக்கு பதவி உயர்வு கிடைத்ததற்காக, ஜெயசீலாவிற்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். செல்லத்தாய்க்கு கால் வீக்கத்திலிருந்து சுகம் கிடைக்க, சாந்தகுமார், சாமுவேல், சீதா ஆகியோருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க–வேலை கிடைக்க, கனியமுதுக்கு செல்லம்பட்டி அலுவலகத்திலேயே வேலை கிடைக்க ஜெபிப்போம்.

**ஆகஸ்ட் -11**

**அருட்பணியாளர் :**
**திரு.J. ஜெயகுமார்–திருமதி. கனி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அடைக்கன்பட்டி, முத்துப்பட்டி, மணப்பட்டி, வெள்ளபாறைபட்டி, தனக்கன்குளம் ஆகிய கிராமங்களுக்காக, தையல் பயிற்சி கற்றுக் கொண்ட 9 பேருக்காகத் துதிப்போம். மீனா, கௌசிகா, பானு, பேரரசு, முகிலன், ஆகாஷ், அஸ்வின், முத்துராமன், சாந்தி ஆகியோர் இரட்சிக்கப்பட–திருமுழுக்கு எடுக்க ஜெபிப்போம்.

**தேனி மாவட்டம்**
**அருட்பணியாளர் :**
**திரு.P. தேவதாஸ்–திருமதி. பிலோமினா**

ஆராதனையில் புதிதாக கலந்து கொண்ட சக்திவேல், தருமன், கௌதம் ஆகியோருக்காக, அநேக வருடங்களுக்குப் பிறகு சித்ராவுக்கு கிடைத்த குழந்தை பாக்கியத்திற்காகத் துதிப்போம். சக்திவேல், தருமன், கௌதம், வீரவேல், கார்த்திக், கருப்புசாமி, முத்துராஜ்

ஆகியோர் இரட்சிக்கப்பட, சின்னம்மாளுக்கு செவிலியர் வேலை கிடைக்க, பொற்கொடி, பத்மினி ஆகியோர் புற்று நோயிலிருந்து சுகம் பெற, சுப்பம்மாளுக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு.G. நாதன்–திருமதி. மேகலா**

சரவணன் மனைவிக்கு கிடைத்த குழந்தை பாக்கியத்திற்காகத் துதிப்போம். விபத்தில் பாதிக்கப்பட்ட புஷ்பகுமார், கிஷோர் ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, காயத்திரிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, செல்வராஜ் நீரிழிவு நோயிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**ஆகஸ்ட்-12**

**அருட்பணியாளர் :**

**திரு.J.உலகநாதன்–திருமதி. சுபா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மேல்மங்கலம், வடுகப்பட்டி, வள்ளுவர் காலனி, ஆசிரியர் காலனி, கோட்டப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, மகேஸ்வரி, பெரியநாயகி ஆகியோருக்கு வேலை கிடைத்ததற்காக, பிரியங்காவுக்கு திருமணம் நடைபெற்றதற்காக, செல்வி கடன் பிரச்சினையிலிருந்து விடுதலை பெற்றதற்காக, தங்க பாப்பா கணவருக்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். சந்திரசேகர், கணேசன், மல்லிகா குடும்பம் இரட்சிக்கப்பட, விஜயலட்சுமி, ஜானகி, ஜோதி ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, அற்புதம், சோனியா, வெங்கடேஷ் ஆகியோருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க, கங்கா–ரெகுபதி குடும்பத்தில் சமாதானம் கிடைக்க ஜெபிப்போம்.

**விருதுநகர் மாவட்டம்**

**அருட்பணியாளர் :**

**அருள்திரு.B. சாமுவேல் கணேசன்**
**திருமதி. விஜயா**

குட்டியம்மாவுக்கு சுகம் கிடைத்ததற்காகத் துதிப்போம். வசந்த் குடும்பம், மோகன் குடும்பம் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**தென்காசி மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு. லிவிங்ஸ்டன்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கலப்பாக்கம், சிதம்பரம், வலசை, திருமலாபுரம், அச்சம்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, நற்செய்தி கைப்பிரதிகள் 1000 கொடுக்கப்பட்டதற்காக, முனியசாமியின் சொத்து வழக்கு அவருக்கு சாதகமாக முடிந்ததற்காகத் துதிப்போம். தாமரைச்செல்வி, பிரியா, தீபா, அனிதா, சுபதீஷ், சிவா ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**கரூர் மாவட்டம்**

**அருட்பணியாளர் :** **ஆகஸ்ட்-13**

**திரு. J. பவுல்ராஜ்– திருமதி. எமீமாள்.**

புதிதாக நற்செய்தி கேட்ட செல்லரப்பாளையம், மூலப்பட்டி, பழமாபுரம், அதியமான்கோட்டை, செம்மடை, மருத்துவர் நகர், சமத்துவபுரம் ஆகிய கிராமங்களுக்காக, பாரதிக்கு சுகப்பிரசவத்தில் பெண் குழந்தை பிறந்ததற்காக, லோகேஷ், காந்தரூபி ஆகியோருக்கு அறுவை சிகிச்சை நல்லமுறையில் நடைபெற்றதற்காகத் துதிப்போம். ரம்யாவுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, எமிமாள் கர்ப்பப்பை கட்டி நோயிலிருந்து சுகம் பெற, ரஞ்சிதா–இளங்கோவன், மணிமேகலை ஆகியோர் குடும்பத்திற்கு சமாதானம் கிடைக்க, சுந்தரி சிறுநீரக செயலிழப்பு நோயிலிருந்து சுகம் பெற, பாலகிருஷ்ணன் மனநோயிலிருந்து சுகம் பெற, பொன்ராஜ்–ரம்யா, சுப்புலட்சுமி ஆகியோர் கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**விழுப்புரம் மாவட்டம்**

**அருட்பணியாளர் :**

**திரு.D. தங்கராஜ்–திருமதி. எஸ்தர் பிரியா**

புதிதாக நற்செய்தி அறிவிக்கப்பட்ட மடப்பட்டு, அரும்பட்டு, பருகம்பட்டு, காந்திநகர், காந்தலவாடி, இருந்தை, சித்தானங்கூர், குடிமாங்குப்பம் ஆகிய கிராமங்களுக்காக, பென்சிகாவுக்கு திருமணம் நடைபெற்றதற்காக, சிவகாமிக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டதற்காக, அந்தோணிசாமி குடும்பத்தில் சமாதானம் கிடைத்ததற்காகத் துதிப்போம். ரஞ்சிதா குடும்பம்

இரட்சிக்கப்பட, ராதாகிருஷ்ணன், ஆரோக்கியதாஸ், சுரேஷ், பிரகாஷ் ஆகியோர் குடிப்பழக்கதிலிருந்து விடுதலை பெற, கிரேசுக்கு சுகபிரசவம் கிடைக்க ஜெபிப்போம்.

**தரிசனம் பரப்புவோர்**

இயக்கத்தின் பொருளாதாரத் தேவைகள் சந்திக்கப்பட, புதிய தரிசனம் பரப்புவோர் கிடைக்க, புதிய ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட, திரு.T. விஜயசங்கர் ( தரிசனம் பரப்புவோர் உதவி இயக்குநர் ), ஊழியர்கள்: திரு.R. பால சுப்பிரமணியன், திருமதி. ஹெர்சி லீதியாள் மாசில்லாமணி, திருமதி.C. மேபல் ராணி, திருமதி. இந்திராணி கில்பர்ட், திருமதி. தீபா மோசஸ், திருமதி.J. பிளஸ்ஸி, திரு. வினு, திருமதி. ராணி வின்செண்ட், திரு.K பால்ராஜ், திரு.S. சம்பத்குமார், திரு. தாங்லம் ஜோ, திரு. காளிமுத்து, திரு.A. தம்புராஜ், திரு.P. மாரியானந்தன், திருமதி. சுப்புலட்சுமி, திருமதி.T. சுசீலா, திரு.M.M. சாலமோன், திரு.F. ஹென்றி ஜார்ஜ், திருமதி.A. சம்மனஸ் மேரி, திரு.A. ஜோசப் ஆசீர்வாதம், திரு.A. மகுடீஸ்வரன், திரு.ஜேம்ஸ்.P. ரவிக்குமார், திருமதி. திருவாசகி, திருமதி. ஜான்சி தினா, திரு.S. கிருஷ்ணமூர்த்தி, திருமதி.V. சுவேகா, திரு.M. ஞானசேகரன், திரு. ஜெயராமன், திரு. கிறிஸ்டோபால் கணேஷ், திரு.B. ஹெமின், திரு. ஜாம்சுவான்பாவ் சுந்தாக், திரு.T.S. தெங்கோலுன் ஹோகிப் ஆகியோரின் பயணப் பாதுகாவலுக்காக, குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

**ஆகஸ்ட் -14**

**பணித்தளங்களின் பொறுப்பாளர்கள்**

அருள்திரு.V. இம்மானுவேல் பாண்டி (தென்னிந்திய பணித்தள உதவி இயக்குநர்), திரு.C. ராஜரத்தினம் (சொத்து பராமரிப்பாளர்), திரு. தாங் பாவ் ஹோகிப் (வடஇந்தியப் பணித்தள ஒருங்கிணைப்பாளர்) ஆகியோருக்காக ஜெபிப்போம்.

## மொழிபெயர்ப்புப் பணி

மொழி பெயர்ப்பாளர் திருமதி. ஷீலா நாகராஜனுக்குத் தேவையான ஞானம் கிடைக்க, மொழி பெயர்ப்பு உதவியாளர்கள் திரு.சுக்மன் மாத்லாம், திரு.சுக்மன் பொட்டாய், செல்வி.மங்கள்தாய் ஆகியோருக்காக, ஆதியாகமம்-நியாயாதிபதிகள் வரை உள்ள புத்தகங்களின் மொழி பெயர்ப்புப் பணி விரைவில் முடிவடைய, சுக்மன் மாத்லாம் (1 & 2 நாளாகமம்), மங்கள்தாய் (நெகேமியா) ஆகியோர் செய்துவரும் மொழி பெயர்ப்புப் பணிக்காக, மொழி பெயர்ப்புப் பணிகள் முடிவடைந்த எஸ்றா, யோனா, ரூத் ஆகிய புத்தகங்கள் பிழைத்திருத்தம் செய்யப்பட ஜெபிப்போம்.

**தலைமை அலுவலகம்**

நிதித்தேவைகள் சந்திக்கப்பட்டு வருவதற்காகத் துதிப்போம். அலுவலகத் தேவைகள் சந்திக்கப்பட, பொதுச் சேவகருக்கு இயக்கத்தை நடத்தத் தேவையான ஞானம், பெலன், வழி நடத்துதல் கிடைக்க, பொதுச்சேவகர் அருள்திரு.S. டேவிட் சாலமோன், அருள்திரு.G. பொன்னுராஜ், திரு.A சாம் டென்சிங், திரு.A ஆஷிஸ், திரு.Y. பிரான்சிஸ் ராஜா, திரு.V.S. தம்பிராஜ், திரு.S. ஞானசேகர், திரு.A. பிரபாகரன், திருமதி. ஜான்ஸி ஜெய கிருபா, திரு.D. சைமன், திருமதி. சாரா ஜான் ஆகியோருக்காக ஜெபிப்போம்.

**ஆகஸ்ட் -15** வளரும் விண்ணரசு

இம்மாத இதழ் வெளியிடப்பட்டதற்காக, இதழின் தேவைகள் சந்திக்கப்பட்டதற்காகத் துதிப்போம். இதழில் வெளியிடப்படும் கட்டுரைகள் வாசகர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்க, வாசகர்கள் விரும்பும்வண்ணம் இதழ் வெளியிடப்பட, புதிய வாசகர்கள் கிடைக்க ஜெபிப்போம்.

**நிறுவனர்கள்**

டாக்டர்.N.J. ஞானையா மற்றும் திருமதி. ரஞ்சினி ஞானையா ஆகியோருக்காக, இருவருக்கும் நிறைவான சுகம் கிடைக்க, நிறுவனரின் எழுத்துப்பணி மற்றும் அருட்பணி ஊழியங்களுக்காகவும், திருமதி. ரஞ்சினி

ஞானையா அவர்கள் பெண்கள் நடுவிலும், வேதபாட வகுப்புகள் மூலமும் செய்து வரும் அருட்பணி களுக்காகவும் ஜெபிப்போம்.

**நிர்வாகம்**

செயற்குழு உறுப்பினர்கள் திரு.J. எபிநேசர் மார்டின், Dr.S. அருண், திரு.K ஜான்சன், திரு.P. கோபால கிருஷ்ணன், Dr. தினகரன் ரிச்சர்ட், திரு.J.E. பால் ஆபிரகாம், திரு. வெஸ்லி ஜோயல் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

**இறையியல் கல்வி** **ஆகஸ்ட்-16**

இறையியல் கல்வி பயிலும் 22 பேருக்காகத் துதிப்போம். லால்மின்தாங், பூர்னுசந்திரா, தெபோரா, ஆல்பா, ராஜ்ராம், சுரேந்திரா காவ்டே, திபேஷ் சலாம், உபேஷ் சலாம், ரமேஷ் வாடே, ராம்நாத் வாடே, லலிதா கருங்கா, சுனிதா வாடே, ரஜினி சலாம், சுக்யாரின் மண்டாவி, அஷ்வந்தி கச்லாம், சவிதா நுரெட்டி, சத்தியசீலன், ரெஜினா மேரி, ரேணுகா, சோம்சிங், நெதன்லங், சோந்த்ரோகுமார் ஆகியோர் சிறப்பான முறையில் இறையியல் கல்வி கற்றுத் தேற ஜெபிப்போம்.

**புலம்பெயர்ந்தோர் அருட்பணியாளர்:**

**கன்னியாகுமரி மாவட்டம்**

**அருட்பணியாளர்:**
**திரு. ஓமெந்திராகுமார்**
**திருமதி. சவீத்தா குமாரி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட நாகர்கோவில், கம்பிபாலம், ஆசாரிபள்ளம், பறக்கை, தெங்கம்புத்தூர், வடசேரி, ராமன்புத்தூர், கோணம், சைமன் நகர், பார்வதிபுரம் ஆகிய பகுதிகளுக்காக, பவானி, மஹிசா ஆகியோர் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். சாதிப்பிரச்சனையால் அஞ்சலியின் கல்வி தடைபடாமல் இருக்க, வினோத், முரியா, சந்து ஆகியோர் விரைவில் திருமுழுக்குப் பெற, அன்புகுமார் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

## ஜூலை மாத வேதவினாக்களுக்கான விடைகள்

### கலாத்தியர் 1 முதல் 6 அதிகாரங்கள் வரை

**பொருத்துக**

1. தீத்து – கிரேக்கன் 2:3
2. வலது கை – பர்னபா 2:9
3. மாம்சம் – இரத்தம் 1:16
4. ஆபிரகாம் – நீதி 3:6
5. மத்தியஸ்தன் – தேவன் 3:20

**கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. தேவனுடைய கிருபையை, நீதியானது, கிறிஸ்து மரித்தது 2:21
2. நியாயப்பிரமாணம், நீதியானது, நியாயப் பிரமாணத்தினால் 3:21
3. பெற்றதுமில்லை, கற்றதுமில்லை, இயேசு கிறிஸ்துவே, வெளிப்படுத்தினார். 1:12
4. சுயாதீனத்திற்கு, சுயாதீனத்தை, மாம்சத் திற்கேதுவாக 5:13
5. ஆகார், சீனாய் மலை, ஆகார், எருசலே முக்கு 4:25

**விடை எழுதுக**

1. யாக்கோபு, கேபா, யோவான் 2:9
2. யாக்கோபு 1:19
3. புது சிருஷ்டியே 6:15
4. அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் 5:22-23
5. நாம் அடிமையானவளுக்குப் பிள்ளைக ளாயிராமல் சுயாதீனமுள்ளவளுக்கே பிள்ளைகளாயிருக்கிறோம். 4:31

# வட இந்தியா

## மேற்கத்திய கோண்டுகள் சத்தீஸ்கர் மாநிலம்

**ஆகஸ்ட்-17**

**அருட்பணியாளர்கள்:**
**திரு. லல்துராம் சலாம்.**

